

# உண்மை நிலையை உணர்தல்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** வெளி 3:14–22; வெளி 4:9–11; ஆதி 2:7; 3:8–10; எரே 31:3, 4; யோவான் 15:1–11; ரோமர் 8:9–11.

**மனன வசனம்:** பிதா என்னில் அன்பாயிருந்ததுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். யோவான் 15:9.

இன்று தேவனுடன் உங்கள் உறவு எந்த நிலையில் இருக்கிறது? துடிப்பாக, வலுவாக இருக்கிறதா? இந்த உறவுக்கு நேரம் ஒதுக்குகிறீர்களா? தேவ ஏவுதலால் எழுதப்பட்ட அவரது வார்த்தையை ஆராய்கிறீர்களா? ஒரு நண்பரைப் போலஅவரிடம்பேசுகிறீர்களா? அதற்காகஎவ்வளவுநேரம்செலவிடுகிறீர்கள்?

தேவனோடுள்ள உறவுதான் உங்கள் வாழ்க்கையிலேயே அற்புதமான ஒன்று என்பதால், அதுபற்றி மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்குத் தூண்டப்படுகிறீர்களா? தேவனோடுள்ள உங்கள் உறவு காலப்போக்கில் குறைந்துவருகிறதா? உறவு இருந்தும், அவ்வப்போது சோதித்துப் பார்த்தால், முன்புபோல வலுவாக இல்லையா? ஒருவேளை, வேதாகமம் அழைப்பதுபோல 'வெதுவெதுப்பாயிருக்கிற' நிலையும் காணப்படலாம். வெளி 3:16.

'நமது இரட்சகர் இயேசுவின்மீது நாம் ஏன் எப்போதும் தொழுகை உணர்வோடு இல்லை? தேவனிடம் நெருங்கிவருவதற்கு ஏங்குகிற இருதயம் ஏன் இல்லை? ஆர்வமிக்க மனது ஏன் இல்லை?' இவ்வாறு தேவதூதர்கள் யோசிப்பார்களென்று சிந்தித்திருக்கிறீர்களா? ஆனால், தேவனோடு நமக்குள்ள உறவால் உண்மையாகவே இவ்வுலக வாழ்விலும் நித்திய வாழ்விலும் மாற்றம் ஏற்படுகிறது. தேவனோடுள்ள நம் உறவில் நம்முடைய தற்போதைய நிலையையும், வேதாகமம் நமக்குச் சொல்கிற ஆலோசனையையும் இந்த வாரம் ஆராய்வோம். உண்மையில், நமது தற்போதைய நிலையை உள்ளபடி பரிசோதித்து, இயேசு சொல்கிற தீர்வுக்குச் செவிசாய்க்கும் வரை, நாம் இருக்கும் நிலையிலிருந்து மேலான நிலைக்கு நகரமுடியாது.

*2026, ஏப்ரல் 4 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# நம்முடைய நிலை

தற்சமயம் இயேசுவுடன் உங்களுக்குள்ள உறவுபற்றி இயேசு விவரித்தால், அவர் என்ன சொல்லுவார்? வலுவாக இருக்கிறது என்பாரா? இதைவிட முன்பு அதிக வலுவாக இருந்தது என்பாரா? இந்தக் கடைசி நாட்களில், இயேசு தமது மக்களைப்பற்றி என்ன சொல்லுவார்? வெளி 3:14-22இல், அவர் சொல்கிறார் பாருங்கள். தம்மைப்பற்றி 'உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிறவர்' என்று சொல்லி, துவங்குகிறார். வெளி 3:14. உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சி பொய்சொல்லாது; வெளிப்படையாக, நேர்மையாகப் பேசும்.

**இன்று தம் மக்களுடைய ஆவிக்குரிய நிலைபற்றி வெளி 3:14-17இல் இயேசு விவரிக்கிறார். இந்த வசனங்கள் உங்களை எவ்வளவுக்குத் துல்லியமாக விவரிக்கின்றன?**

கடைசி நாட்களில் வாழ்கிற கிறிஸ்தவர்களாகிய நம் ஒவ்வொருவரையும் தமக்குத் தெரியுமென்று இயேசு சொல்கிறார். எனக்கு எதுவுமே தேவையில்லை என்று நாம் நினைப்பதால்தான், நாம் அனலுமில்லாமல் குளிருமில்லாமல் இருக்கிறோம். நாட்களும் வாரங்களும் கடந்துசென்றாலும், அவ்வப்போது தேவனுடன் சற்றுநேரம் செலவழித்துவிட்டு, அதுவே போதுமென நினைக்கிறோம். ஆனால் அது போதாது. மாறாக, நாம் நினைப்பதைவிட அதிகமாகவும் அவசியமாகவும் அவர் நமக்குத் தேவை. நாம் முழு இருதயத்தோடு இயேசுவை நேசித்து அவருக்காக வாழவேண்டும், அல்லது முழுமையாக விலகிவிடவேண்டும், அப்படி இருந்தால் எவ்வளவு நல்லது! வெதுவெதுப்பாக இருப்பதைவிட, வேண்டாமெனச் செல்வதே நல்லதென்று தேவனே சொல்கிறார். வெதுவெதுப்பான நிலையானது குமட்டலான நிலை என்பதால், நம்மை வாந்திபண்ணிப்போடுவதாக இயேசு சொல்கிறார். ஆனால், உடனே அதைச் செய்யாமல், துணிச்சலான சில தீர்மானங்களை நாம் எடுக்கும்படி கூறுகிறார்.

**வெளி 3:18,19இல் அவர் நமக்குக் கொடுக்கிற ஆலோசனை என்ன?**

பண்டைய காலங்களில் பண்டமாற்று முறையில் பொருட்களைப் பரிமாறிக்கொள்வதைத்தான் 'வாங்குவது' எனும் சொல் சுட்டிக்காட்டுகிறது. இங்கே இயேசு தாராளமாகப் பரிமாறிக்கொள்வதாகச் சொல்கிறார்: நம்முடைய மந்தமான நிலைக்குப் பதிலாகத் தமது பொன்னையும், வெண்வஸ்திரங்களையும், கண் மருந்தையும் தருகிறார். தம்முடைய கண்களில் நம்மை ஐசுவரியவான்களாகப் பார்க்க விரும்புகிறார்; தம்முடைய பரிபூரண நீதியாகிய வஸ்திரத்தால் நம்மை மூட விரும்புகிறார்; அவரோடு நிலைத்திருக்கும் உறவால் எப்படிப்பட்ட முழுமாற்றம் உண்டாகும் என்பதை நாம் காணும்படி, நமது கண்களைத் திறக்க விரும்புகிறார். நமக்குத் தேவையான அனைத்தையும் அவர் வழங்குகிறார்; நமக்குத் தேவையானவற்றை நமக்குநாமே கொடுக்கமுடியாது என்பதால், அவர் அதைச் செய்கிறார். அவரால்மட்டுமே முடியும், அவர் அதைச் செய்யவும் செய்வார்; ஆனால் நாம் அதற்குச் சம்மதித்தால்மட்டுமே அது நடக்கும்.

---

**உங்கள் சொந்த ஆவிக்குரிய நிலையை ஆராயும்போது, உங்களுக்கு மனது வலிக்கிறதா? இன்றைய சூழலில் இந்த வசனங்கள் உங்களுக்கு அளிக்கும் நம்பிக்கை என்ன?**

# கடிந்துகொள்ளுதல், மனந்திரும்புதல், பிரதிபலன்

'நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு' என்று வெளி 3:19. இயேசு நம்மைப் பற்றியோ நம்முடைய எதிர்காலத்தைப் பற்றியோ கவலைப்படவில்லை என்று நம்மில் எவரும் சொல்லமுடியாது; அது நியாயமும் அல்ல. இயேசு நினைத்திருந்தால் மனிதர்களைக் கண்டுகொள்ளாமலும், பூமியில் அவர் தேர்ந்தெடுத்த வேதனையான பாதையில் பயணிக்காமலும் இருந்திருக்கலாம். அவர் நம்மை மிகவும் நேசிப்பதால்தான், நம்முடைய தற்போதைய நிலைகுறித்து கண்டிக்கிறார். நம்முடன் வலுவான, ஆழமான ஓர் உறவை விரும்புகிறார். நாம் அவ்வப்போது காட்டுகிற பக்தியையும், 'தேவைப்படும்போது மட்டும் அவரிடம் செல்வேன்' என்கிற அணுகுமுறையையும் கண்டு அவர் திருப்தியடைவதில்லை.

மாறாக, நம் நலனுக்காகவே இயேசு நம்மைக் கடிந்துகொள்கிறார். நம்மிடம் மனந்திரும்பச் சொல்கிறார். ஆனால் நம்மிடம் பிரச்சினை இருக்கிறது என்பதை உணராவிட்டால் நம்மால் மனந்திரும்பவே முடியாது. நம்மிடம் என்ன பிரச்சினை இருக்கிறது என்பதை அவர் சொல்லியிருக்கிறார்: அதாவது, நம்மை ஐசுவரியவான்களென்று எண்ணிக்கொள்கிறோம்; ஆனால் உண்மையில் 'அவலமாக, பரிதாபத்திற்குரியவர்களாக, ஏழைகளாக, குருடராக, உடையற்றவர்களாக' இருக்கிறோம். வெளி 3:17; சமகால மொழிபெயர்ப்பு.

**வெளி 3:20இல் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதி என்ன? அந்த வாக்குறுதியைப் பெற்றுக்கொள்ள நாம் என்ன செய்யவேண்டும்?**

இது ஒப்பற்ற சொல்நடை. அண்டசராசரத்தின் தேவன் உங்களோடும், என்னோடும் அமர்ந்து ஒரு வேளை உணவருந்த விரும்புகிறார். நல்ல உணவை அருந்திக்கொண்டே பரஸ்பர ஈடுபாட்டையும் உரையாடலையும் விரும்புகிறார். அவர் நெருக்கமான, நிலையான ஓர் உறவை விரும்புகிறார். அத்தகைய உறவை அவரோடு வைத்துக்கொள்ளுமாறு இயேசு நம்மை அழைக்கிறார்.

உங்கள் இருதயத்தின் வாசல்கதவைத் தட்டி, பொறுமையோடு இயேசு காத்திருக்கிறார். ஒருவேளை சிறுவர்களுக்கான புத்தகங்களில், கருணை மிகுந்த, கம்பீரமான ஓர் இரட்சகர், அன்போடு கதவைத் தட்டுகிற ஒரு காட்சியைப் பார்த்திருக்கலாம். அவர் கதவை உடைத்துவந்து, தம்மிடம் கட்டாயமாகப் பேசும்படி சொல்லமாட்டார். உங்கள் நேரத்தில் அல்லது பரபரப்பான வாழ்க்கையில் குறுக்கிடமாட்டார். காலம் குறுகியது; எனவே, அவர் பேசுவது கேட்டால் கதவைத் திறந்துவிடுங்கள். உங்கள் வாழ்க்கைக்குள் அடியெடுத்துவைக்க ஆயத்தமாக இருக்கிறார்.

நம் ஒவ்வொருவரோடும் இயேசு விரும்புகிற உறவை இந்த உருவகம் எடுத்துக்காட்டுகிறது. ஆனால் ஒருநாள், நீங்கள் இயேசுவை நேருக்கு நேராகச் சந்தித்து, உங்கள் கிரீடத்தை அவர் பாதத்தில் வைத்து ஆயிரம் ஆயிரமானவர்களுடன் சேர்ந்து சிருஷ்டிகரைத் துதித்து தொழும்போது, (வெளி 4:9-11, 5:11-14) பூமியில் பட்ட கஷ்டங்களெல்லாம் ஒன்றுமில்லை என்று தோன்றும்போது, பூமியில் இயேசுவுடன் செலவிட்ட நேரம் குறித்து வருத்தம் உண்டாக வாய்ப்புள்ளதா?

---

**இப்போது இயேசு தட்டிக்கொண்டிருக்கிறார். உங்களை அழைக்கிறார். அவருக்கு உங்கள் இருதயத்தைத் திறப்பதற்கு நீங்கள்தாம் தீர்மானிக்கவேண்டும். சிலுவையையும் அதன் அர்த்தத்தையும் எண்ணிப்பார்ப்பது எவ்வாறு அந்தத் தீர்மானத்தை நீங்கள் மனதாரச் செய்வதற்கு ஊக்குவிக்கும்?**

# நித்திய அன்பு

நம் அக்கறையற்ற நிலையை விவரித்துவிட்டு, அதை வெல்லவேண்டுமென்று இயேசு சொல்கிறார். 'நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்' வெளி 3:21. நமது பலவீன நிலையையும், சுயநிறைவு மனநிலையையும் உணர்வது நம்மில் சிலருக்கு மிகப்பெரிய போராட்டமாக இருக்கலாம். இயேசுவின் கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்வதும், மனந்திரும்புவதும், இயேசுவின் நீதியின் அங்கியை நம்மேல் ஏற்றுக்கொள்வதும் போராட்டமாக இருக்கலாம்.

ஆனால் இயேசு, மந்தமும் வெதுவெதுப்புமான நம் நிலையைப் புரிந்துகொள்கிறார், நம் நிலை தெரியும் என்று சொல்வதுதான் ஆச்சரியம்!'நான் ஜெயங்கொண்டதுபோல ஜெயங்கொள்ளுகிறவன்' என்கிறார். வெளி 3:21. நம்மை இரட்சிக்கும்படி மரித்ததின்நிமித்தம், இயேசு பாவத்தின்மேலும் அதன் தண்டனைமேலும் வெற்றி பெற்றிருக்கிறார். நாம் எதிர்கொள்கிற பாவப்போராட்டங்கள் அவருக்குத் தெரியும்; நமக்கு உதவுவதாக வாக்குரைத்திருக்கிறார்.

தம்முடன் ஓர் உடன்படிக்கை உறவை ஏற்படுத்துமாறு தேவன் கொடுத்த அழைப்பிற்கு வேதநபர்கள் பலர் கீழ்ப்படிந்திருக்கிறார்கள். இதுதான் வேதாகமம் முழுவதிலும் முக்கியக் கருத்து. வெவ்வேறு காலக்கட்டங்களில் வெவ்வேறு வகையில் தேவன் அவர்களுடன் இடைபட்டதைக் காணலாம்.

**வெவ்வேறு சூழ்நிலைகளில் மனிதர்களுடன் தேவன் இடைபட்டதுபற்றி பின்வரும் சம்பவங்கள் என்ன சொல்கின்றன? ஆதி 2:7; 3:8-10; 5:24; 6:13; 12:1-4; யாத் 34:29.**

---

தேவன் தமது பிள்ளைகளோடு நேரடியாக நடந்துசென்றிருக்கிறார்; அவர்களுடன் பேசியிருக்கிறார்; மனிதர்களுடன் நெருக்கமாக இருக்கவேண்டும் என்பதே அவரது ஆசை. இன்று தேவனுடன் உங்களுடைய உறவு எந்த நிலையில் இருந்தாலும் சரி, அவர் உங்களுடன் நெருக்கமாக இருக்க விரும்புகிறார். எரேமியா 31:3,4 இந்தக் கருத்தைச் சொல்கிறது:

'பூர்வகாலமுதல் கர்த்தர் எனக்குத் தரிசனையானார் என்பாய்; ஆம் அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன். மறுபடியும் உன்னைக் கட்டுவிப்பேன், நீ கட்டப்படுவாய்'.

இப்போது நீங்கள் ஒரு நாளின் துவக்கத்தில் இருந்தாலும் சரி, முடிவில் இருந்தாலும் சரி, தேவன் உங்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்;, உங்களுக்காகக் காத்திருக்கிறார்; அவர் உங்களைத் தம்மிடம் இன்னும் நெருக்கமாய் இழுத்துக்கொள்ள விரும்புகிறார். அவரோடு உங்களுக்குள்ள உறவைக் கட்டவோ, சீரமைக்கவோ விரும்புகிறார். அவ்வாறு நிகழாவிட்டால், தவறு உங்களிடம்தான் இருக்கும், அவரிடம் இருக்காது.

---

**உங்கள் வாழ்க்கையில் தற்போதுள்ள எந்த விஷயங்கள் தேவனோடுள்ள உங்கள் உறவைத் தடுத்துக் கொண்டே இருக்கின்றன? அவற்றை வெல்வது ஏன் அவசியம்?**

# நிலைத்திருங்கள்

அது பூமியின் வரலாற்றிலேயே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இரவு. மேலறையிலிருந்து இயேசுவும் சீடர்களும் கீழே இறங்கித் தெருவில் கெத்செமனேக்கு நடந்துசென்றார்கள்; மேலறையில் இயேசு தங்களிடம் பேசின கடைசி வார்த்தைகள் எவ்வளவு ஆழமானவை என்பதை அவர்கள் உணர்ந்திருக்க வாய்ப்பில்லை.

**யோவான் 15:1-11இல் இயேசு சொன்னது என்ன? அது மனிதர்களுக்கு எவ்வளவு முக்கியமானது?**

தேவனுடன் நெருக்கமான உறவு வேண்டும் என்பதை இயேசு இங்கே சொல்கிறார். அங்கே பத்துமுறை வருகிற ஒரு வார்த்தையை நீங்கள் கவனிக்க வேண்டும்; அது 'நிலைத்திருத்தல்' என்பதாகும்.

சிலுவைக்குச் சென்றுகொண்டிருந்த இயேசு, தம்மில் நிலைத்திருப்பதின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார்; மேலும், இது நடைமுறையில் நம் வாழ்க்கையில் எவ்வாறெல்லாம் காணப்படும் என்பதையும் தெளிவாகச் சொல்கிறார்.

அதாவது, இயேசுவே திராட்சச்செடி, நாம் கிளைகள். நாம் அவரில் நிலைத்திருப்பதின் விளைவாக, நம் கிளைகளில் கனிகள் விளையும். நாமாக அந்தக் கனியை விளையச்செய்யமுடியாது. சிலசமயங்களில் நாம் அவரில் நிலைத்திருப்பதுபோலத் தெரியும், நம்மில் கனியில்லாவிட்டால், அது பொய்; இறுதியில் நம் கிளைகள் காய்ந்துவிடும். காய்ந்துபோனால், தோட்டக்காரர் காய்ந்த கிளைகளை வெட்டிவிடுவார்.

அதேநேரம் சவாலும் வேதனையுமான தருணங்கள் அனைவருக்குமே ஏற்படுகின்றன. இப்போது அவரில் நாம் நிலைத்திருந்தால், நீண்டகாலத்திற்கு அதிகமான கனிகொடுப்போம். கனிகொடுப்பதுதான் நாம் அவரது சீடர்கள் என்பதைக் காட்டுகிறது. நாம் நமக்கல்ல, அவருக்கு மகிமை உண்டாகக் கனிகொடுக்கிறோம். இயேசுவுக்குள் நிலைத்திருப்பது என்றால், அவருடைய சுய நலமற்ற அன்பின் பிரதிபலிப்பான அவரது கற்பனைகளைக் கைக்கொள்வதாகும். இயேசுவுக்குள் நிலைத்திருப்பது மிகுந்த சந்தோஷத்தைத் தருகிறது. இயேசுவுக்குள் நிலைத்திருப்பது என்றால், அவர் நம்மிடம் செய்யச்சொல்வதைச் செய்வதாகும். 'நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல' 1யோவான் 5:3.

நம்முடைய லவோதிக்கேய மனநிலை மாற மிகச்சிறந்த மருந்துகளில் ஒன்று இயேசுவுக்குள் நிலைத்திருப்பதாகும். வெளி 3:20; யோவான் 15:4. பூமியிலும் நித்தியத்திலும் மனநிறைவான, அர்த்தமிக்க வாழ்க்கையைப் பெறுவதற்கு இது மிகப்பெரிய இரகசியம்; ஆனாலும் ஏனோ இயேசுவின் ஆலோசனையை எளிதில் மறந்துவிடுகிறோம்.

இயேசு நம் ஒவ்வொருவருக்கும் சொல்வது இதுதான்: 'பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்.' யோவான் 15:9. இயேசுவின் அன்புதான் நம்மை அவரிடம் கட்டி இழுக்கிற கயிறு; இந்த அன்பை நாம் அறிந்துகொள்ளும்போது, நாம் தேவனிடமும் மற்றவர்களிடமும் அன்புகாட்டத் தூண்டப்படுவோம்.

# திராட்சச் செடியுடன் இணைந்திருத்தல்

கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பது சிலசமயங்களில் மிகக்கடினமாகத் தெரியலாம். நிலைத்திருக்கவேண்டிய அவசியம் நமக்குப் புரிந்தாலும், இந்த வாழ்க்கையின் பரபரப்பு அது கடினமாகக் காட்டுகிறது. தேவனைப் பின்பற்றுவது மிகப்பெரிய சுமையாகத் தோன்றுகிறது, குறிப்பாக இயேசுவைப் பின்பற்றும்படி யாராவது ஒருவரால் நச்சரிக்கப்படுபவர்களுக்கு இது மிகவும் கடினமாகத் தெரியும். இதுபோன்ற மார்க்கம் இருதய மாற்றத்தைவிட வெளிப்புற செயல்களை முக்கியப்படுத்துவதால், சலிப்பாகத்தான் தெரியும். ஆனால் தேவன் விரும்புவது இதுவல்ல; வெறும் சட்டதிட்டங்களை அல்ல, பரஸ்பர அன்பை அடிப்படையாகக் கொண்ட ஓர் உறவை அவர் விரும்புகிறார். அது தெரிந்துகொள்கிற சுதந்திரத்தைப் பயன்படுத்தி, அன்புகூர்ந்த உறவாக இருக் கும். அவர்தான் உங்களை முதலில் தெரிந்துகொள்கிறார்.

சில நேரங்களில் நாம் திராட்சச் செடியோடு அரைகுறையாக இணைக்கப்பட்டிருக்கலாம், நம்முடைய ஒவ்வோர் அம்சமும் ஆழமாக இணைக்கப்படாமல் இருக்கலாம். சபைக்குச் செல்தல், ஜெபித்தல், நமக்குச் சரியென்று தெரிந்திருப்பதைச் செய்தல் போன்றவை காணப்பட்டாலும், உள்ளத்தில் வறண்டுபோன உணர்வு இருக்கும். உண்மை இதுதான்: ஒரு கிளையால் எவ்வாறு தானாக திராட்சச்செடியில் ஒட்ட முடியாதோ, அதுபோல நாமாக நம்மை இயேசுவில் நிலைத்திருக்கச் செய்யமுடியாது. தேவன் முதலில் நம்மில் அன்புகூர்ந்தார்; அவரே முதலடி எடுத்துவைத்தார். தேவன் நமக்காக முதலில் செய்தவற்றிற்கு நாம் காட்டுகிற எதிர்வினைதான் நம் செயல்கள்.

இதற்கிடையில், ஒரு திராட்சக்கொடி குளிர்காலத்தைச் சமாளிக்கிற விதம் வியப்பானது; அதாவது, கிளைகளில் உள்ள மொட்டுகள் நீரிழந்து, வளர்ச்சி செயல்பாட்டிலிருந்து ஒதுங்கி, வசந்த காலம் வரும்வரை ஒருவித உறக்க நிலையில் இருக்கும். வசந்தகாலத்தில் நிலம் சூடானதும், வேர்கள் தண்ணீரை உறிந்து, திராட்சைக் கொடியின் தண்டுவழியாக சத்தான சாறு மொட்டுகளுக்குச் சென்றதும், வளர்ச்சிச் செயல்பாடு துவங்கும். அந்தச் சாறு தண்டுவழியாகச் செல்லாத வரையிலும், வளர்ச்சி இருக்காது.

திராட்சக்கொடியின் சத்துச்சாற்றை நம் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் கிரியைக்கு ஒப்பிடலாம். நாம் வாடிப்போன கிளைபோல இருந்தாலும், தேவனுடன் நேரம் செலவிடத் தீர்மானிக்கும்போது, வேர்களிலிருந்து பாய்கிற சாறுபோல ஆவியானவர் நமக்குள்ளாக வந்து, நாம் வளரும்படி நமக்குள் ஜீவ னைக் கொடுக்கிறார். இயேசு நமக்குள்ளாக நிலைத்திருப்பதற்கு நாம் மனதாரத் தீர்மானிக்கவேண்டியது போலவே, ஆவியானவர் (சாறு) நம் வாழ்க்கையில் பாய்ந்தோடுமாறு நாம் கேட்க வேண்டும்.

**பின்வரும் வசனங்கள் சொல்கிற முக்கியச் செய்தி என்ன? லூக் 11:13; எரே 31:3; 1யோவான் 4:19; ரோமர் 8:9–11.**

பரிசுத்த ஆவியானவர்தாம் வளர்ச்சியை உண்டாக்குகிறார்; நாம் திராட்சக் கொடியுடன் இணைந்து, செழிப்பாக இருப்பதை உறுதிசெய்கிறார். பூமியில் நம் முடன் இருக்கிற ஆவியானவரிடம் தினமும் நாம் கேட்கவேண் டியவை:

எங்களுடைய தேற்றரவாளனாக இரும் (யோவான் 14:16–18), எங்களுக்கு இயேசுவை வெளிப்படுத்தும் (யோவான் 15:26), எங்களுடைய பாவங்களை உணர்த்தும் (யோவான் 16:7, 8), சகல சத்தியத் திற்குள்ளும் எங்களை வழிநடத்தும் (யோவான் 16:13).

**அந்தப் பட்டியலை மீண்டும் வாசியுங்கள். ஆவியானவருடைய கிரியையின் ஒவ்வோர் அம்சமும் எவ்வாறு தேவனோடுள்ள உங்கள் உறவை மாற்றியமைக்க முடியும்?**

# மேலும் படிக்க:

நாம் பிறப்பதற்குமுன்னரே தேவன் நம்மை நேசித்தார்; நாம் அவரைப்பற்றி அறிந்துகொள்ள ஒரு திட்டத்தை வைத்திருந்தார். ஒரு நல்ல மேய்ப்பனைப்போல நம்மைத் தேடுகிறார். தினமும் நாம் அவரில் நிலைத்திருக்குமாறு அழைக்கிறார். அவர் கேட்கிறபடி செய்ய நாம் தீர்மானிப்பது நம் வேலை; நம்முடைய லவோதிக்கேய நிலையை அவரிடம் கொடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக அவரது நல்ல ஈவுகளை வாங்கவேண்டியதும் நம் வேலை. வெளி 3:18,19.

திராட்சக்கொடியின் கிளைகள்போல தேவனுடன் நம் உறவின் வளர்ச்சி மெதுவாக இருக்கலாம்; வேகமாக வளர்ச்சி இருக்கலாம். எவ்வளவு வேகத்தில் வளர்கிறோம் என்பதோ, நம் வாழ்வில் எவ்வளவு மிகுதியான கனிகள் விளைகின்றன என்பதோ முக்கியமல்ல; நாம் இயேசுவோடு தொடர்ந்து இணைக்கப்பட்டிருப்பதை உறுதிசெய்ய, நமக்குத் தினமும் அந்தச் 'சாறு' அல்லது பரிசுத்த ஆவியானவர் தேவைப்படுகிறார் என்பதே முக்கியம்.

'கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பது என்பது, அவரது ஆவியைத் தொடர்ந்து பெறுவதையும், எவ்வித நிபந்தனையுமின்றி அவருடைய பணிக்கு நம்மை ஒப்புக்கொடுத்து வாழ்வதையும் குறிக்கிறது. மனிதனுக்கும் அவனது தேவனுக்கும் இடையில் தகவல்தொடர்பு எப்போதும் தடையின்றி இருக்கவேண்டும். திராட்சச்செடியின் கிளை பசுமையான அதன் தண்டிலிருந்து எப்போதும் சாற்றைப் பெறுவதுபோல, நாமும் இயேசுவை இறுகப் பற்றிக்கொண்டு, விசுவாசத்தின் மூலம் அவருடைய சொந்த சுபாவத்தின் உறுதியையும் பூரணத்தையும் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்'

'தனியாக விடப்பட்ட, வறண்டுபோன ஓர் இளங்கொடி, எப்படி தாய்ச்செடியோடு ஒன்றாக இணையமுடியும்? உயிருள்ள அந்தத் திராட்சச்செடியின் உயிரிலும் சத்திலும் அது எவ்வாறு பங்கடையமுடியும்? திராட்சச்செடியோடு இணைக்கப்படுவதன் மூலமாகமட்டுமே இது சாத்தியம். ஒவ்வொரு நாராக, ஒவ்வொரு நரம்பாக, அந்தச் சிறு கிளை உயிர் கொடுக்கிற திராட்சச்செடியை இறுகப்பற்றிக்கொள்கிறது; செடியின் உயிர்தான் கிளைக்கு உயிர்கொடுக்கிறது; அந்தக் கிளையும் செடியின் கனிகளைக் கொடுக்கும்வரை பிணைப்பு நீடிக்கிறது'.

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *"அவரது ஆவியைத் தொடர்ந்து பெறவேண்டும்" என்று எலன் ஒய்ட் சொல்கிறார். ஆவியானவரைக் கேட்டு எவ்வளவு தூரம் ஜெபிக்கிறீர்கள்? தினமும் நீங்கள் ஆவியானவரைப் பெற்றுவந்தால் என்ன மாற்றம் ஏற்படும்? ஆவியானவரைப் பெறும்படி ஒரு சபையாக நாம் ஜெபித்துவந்தால் என்ன மாற்றம் உண்டாகும்?*

2 *உங்களால் தாங்கவே முடியாத அளவுக்கு உங்களுக்கு வலித்தாலும் பரவாயில்லை, தேவனுடன் உங்களுக்குள்ள உறவு எப்படி இருக்கிறதென்று மறைக்காமல் சொல்லுங்கள். அவர் உங்களுடன் விரும்புகிற, ஆனால் நீங்கள் தடைபண்ணுகிற நெருக்கத்தை அவருடன் பெறுவதற்கு என்ன தீர்மானங்களைச் செய்யவேண்டியுள்ளது?*

**பாடச்சுருக்கம்:** தேவனுடன் உறவில் வளருவதற்குமுன், தற்சமயம் அவருடன் நம் உறவு எந்த நிலையில் இருக்கிறது என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். அது லவோதேக்கேய நிலையில் இருந்தால், அதாவது நம் கிளைகள் செழிப்பற்று இருந்தால், நம் ஆவிக்குரிய நிலைக்கு இயேசுவிடம் மிகத்துல்லியமான ஒரு தீர்வு இருக்கிறது: அது அவரில் நிலைத்திருப்பதுதான்.

# ஆசீர்வாதமாக இருப்பதன் நோக்கம்

காங்கோ ஜனநாயகக் குடியரசில் உள்ள தனது கிராமத்தில் கவோனோ கிவட்சி சாம்வேலே மேளம்வாசிப்பதில் ஆர்வமுடையவராக இருந்தார். அவர் கிராமத் தலைவராகப் பொறுப்பேற்கவிருந்த அந்த நாட்களில், அவர் மேளம் வாசிக்க, அவரது மனைவி பாடல் பாடுவது ஒரு இனிய வாழ்க்கையாக இருந்தது. இருப்பினும், 20 வயதை அப்போதுதான் கடந்திருந்த கவோனோவிற்கு ஒரு யோசனை தோன்றியது. தன் மனைவி பாடும் பாடல்களைத் தானே எழுத முடிந்தால், அதற்கு மேளம் வாசிப்பது இன்னும் மகிழ்ச்சியாக இருக்கும் என்று நினைத்தார். அதைச் செய்வதற்கு, அவருக்கு எழுதவும் படிக்கவும் தெரிய வேண்டியிருந்தது. பக்கத்து கிராமத்தில் ஒரு செவந்த்–டே அட்வென்டிஸ்ட் பள்ளி திறக்கப்பட்டிருப்பதை அறிந்து, அங்கு முதலாம் வகுப்பில் சேர்ந்தார்.

அந்தப் பள்ளியில், அவர் எழுதவும் வாசிக்கவும் கற்றுக்கொண்டதோடு, பரலோகத்தின் தேவனைக் குறித்தும் அறிந்துகொண்டார். அங்கு பயின்றபோது, ஒரு போதகராக மாறும்படி தேவன் தன்னை அழைப்பதை உணர்ந்தார். எனவே, கிராமத் தலைவராகும் உரிமையை விட்டுக்கொடுத்து, ஒரு அட்வென்டிஸ்ட் போதகரானார். அவருக்கு காசெரேகா மகுலு கவோட்சி என்ற மகன் இருந்தார்.

சிறுவனாக இருந்தபோது, காசெரேகா தனது தந்தையுடன் ஊழியப் பயணங்களுக்குச் சென்றார். அவரும் ஊழியப்பணிகளில் ஈடுபடவேண்டும் என்கிற அழைப்பை உணர்ந்தார். ஆனால், அவருக்கு தொழில்துறையில் திறமை இருந்தது. எனவே அவர் வணிகத்தில் இறங்கினார், ஒரு பண்ணையை நிறுவினார், மீன்பிடித் தொழிலை விரிவுப்படுத்தினார், பின்னர் ஒரு ஆடை விற்பனை நிலையத்தையும் திறந்தார். அவரது வணிகங்கள் ஒரு செழிப்பான சாம்ராஜ்யமாக வளர்ந்தது.

காசெரேகா தனது தந்தையிடமிருந்து கற்றுக்கொண்ட வேதாகம உண்மைகளை மறக்கவில்லை. தனது வருமானத்தில் 10 சதவீதத்தைத் தசமபாகமாகக் கொடுத்தார். திருமணத்திற்குப்பிறகு, அந்தத் தம்பதியினரின் முதல் தசமபாகத் தொகை 10,000 அமெரிக்க டாலர்களாக இருந்தது. ஒரு திருச்சபை சுவிசேஷகரின் மகளான காசெரேகாவின் மனைவி, தசமபாகம் மட்டுமின்றி 10 சதவீத காணிக்கையையும் வழங்கவேண்டும் என்று கூறினார். காணிக்கையாக எவ்வளவு கொடுக்கவேண்டும் என்பதில் காசெரேகா நீண்டகாலமாக உறுதியற்ற நிலையில் இருந்தார், ஆனால் அவரது மனைவியின் வேண்டுகோள் அவரை இணங்கச் செய்தது. அந்தத் தம்பதியினர் காணிக்கையாக மேலும் 10,000 டாலர்களை வழங்கினர். அதன்பிறகு, அவர்கள் 10 சதவீத தசமபாகத்தையும் 10 சதவீத காணிக்கையையும் கொடுத்து வந்தனர். அவர்களது வாழ்க்கையில் எதற்கும் குறைவு ஏற்பட்டதே இல்லை. "நீங்கள் திருச்சபைக்கு உதவும்போது, அதற்குப் பதிலாக உங்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்கிறது' என்றார் காசெரேகா.

இயேசுவின் வருகையை அறிவிப்பதில் தனது பங்கினைச் செய்ய விரும்பிய காசெரேகா, 'மாபெரும் போராட்டம்' புத்தகத்தின் பிரதிகளை சக வணிகத்தலைவர்களுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் விநியோகித்தார். ஒரு ஆதரவற்றோர் இல்லத்தைத் தொடங்கினார். ஆதரவற்றக் குழந்தைகள் மற்றும் பிறர் தங்களது முதுகலை மற்றும் முனைவர் பட்டங்களைப் பெறுவது வரையிலான கல்விச் செலவுகளை அவரே ஏற்றார்.

அவர் மற்றவர்களை ஆசீர்வதிக்க விரும்பியபோது, அவருக்கு திரும்ப ஆசீர்வாதங்கள் கிடைத்தன. அவர் 100–க்கும் மேற்பட்டவர்கள் பட்டப்படிப்பை முடிக்க உதவியிருக்கிறார். ஆனால் நாட்டில் தகுதிக்கேற்ற வேலைகள் இல்லாததால் அவர்களில் பலருக்கு வேலை கிடைக்கவில்லை. எனவே, காசெரேகா அவர்களையே தனது நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தினார்; அவர்களது திறமை அவரது வணிகத்திற்குப் பெரும் ஆசீர்வாதமாக அமைந்தது.



"உங்களால் தேவனைவிட அதிகமாகக் கொடுத்துவிட முடியாது" என்று காசெரேகா கூறினார்.